1982 செப்டம்பர் 10] (ப. குழந்தைவேலு)

''அங்கீகாரம் பெறாமல் வீட்டு மனை விற்கப்படும்பொழுது பத்திரப் பதிவு செய்யக்கூடாது என்று சட்டமாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

இதற்கு ''ஏற்கனவே இருக்கின்ற 1908வது ஆண்டு இந்தியப் பதிவு செய்தல் சட்டத்தில் இதற்கு இடம் இருக்கிறது. அதுவும் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து 'நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட் வாங்கி வந்தால் தான் பதிவு செய்யவேண்டுமென்று இருக்கிறது, ஆனால் அதற்கு மாறாக உள்ளாட்சி மன்றங்கள் சட்டத்திலேயே திருத்தம் செய்துவிடலாம் என்பது அரசினுடைய பரிசீலனையிலே இருந்துவருகிறது. என்ற பதிலுக்கு மாறாக கீழ்க்கண்ட திருத்திய பதிலை அளிக்கவிரும்புகிறேன்;

''தலைவர் அவர்களே, காலி மனைகளை வீடு கட்டுவதற்கான மனைகளாகவே விற்கப்படுவதை தடுக்கும் பொருட்டு மனைப் பகுதிகள் விற்பனை சம்பந்தப்பட்ட பத்திரங்கள் பதிவு செய்ய சமர்ப்பிக்கப்படும்போது அத்துடன் உள்ளாட்சி (நகராட்சி அல்லது மாநகராட்சியோ) நிறுவனத்திடமிருந்து ஆட்சேபணை எதுவுமில்லை என்னும் சான்றிதழ் கோரிப் பெற சார்-பதிவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், 1908–ம் ஆண்டின் இந்திய பதிவு செய்தல் சட்டத்தினை 1908ம் ஆண்டின் மத்தியச் சட்டம்(XVI) திருத்தம் செய்வதைவிட, உள்ளாட்சி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களான 1919ம் ஆண்டின் சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், மற்றும் 1971-ம் ஆண்டின் மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981–ம் ஆண்டின் கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் ஆகியவற்றை திருத்தம் செய்யலாம் என்ற கருத்துரு ஆய்வில் உள்ளது.

[முற்பகல் 10·10]

4 கவனஈர்ப்பு

செங்கல்பட்டு மாவட்ட கூட்டுறவு கிடங்குகளில் தேங்கியுள்ள காம்பிளக்ஸ் உரங்கள்

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, ''செங்கற்பட்டு மாவட்டத்தில் விவசாய இலாக்கா கிடங்குகளில் 1974 ஆம் ஆண்டு முதல் தேங்கியுள்ள 15:15:15 காம்பிளக்ஸ் உரங்கள் பற்றிய அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே. தற்போது 710 மெட்ரிக் டன் எடையுள்ள என். பி. கே. 15:15:15 காம்பிளக்ஸ் உரம் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு கிடங்குகளில் இருப்பில் உள்ளது. மேற்படி உரத்தை வெளிச்

சந்தையில் விற்பனை செய்வது கடினமாக இருந்ததால், அந்த காம்பிளக்ஸ் உர விலையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 1,552·01 லிருந்து ரூ. 1,506·01 ஆக குறைக்கப்பட்டது. அப்படி குறைக்கப் பட்ட பின்பும் கூட மேற்படி உர இருப்பை விற்றுத் தீர்க்க இயல வில்லை. திருவாளர் ஸ்பிக் உரக்கம்பெனி நிலுவையில் உள்ள எல்லா என். பி. கே. காம்பிளக்சையும் உரக்கலவை தயாரிக்க எடுத்துக் கொள்வதற்கு முன்வந்த காரணத்தால், மேற்படி உரவிலையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 1,055 ஆக அரசு குறைத்தது. ஆயினும் திருவாளர்கள் ஸ்பிக் உரக் கம்பெனியார் மிகக் குறைந்த அளவு காம்பிளக்ஸ் உரத்தையே இதுவரை அரசின் இருப்பில் இருந்து வாங்கியுள்ளார். மீதமுள்ள என். பி. கே. 15:15:15 இருப்பை கூடிய விரைவில் குறைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்த கையிருப் பில் இருக்கும் காம்பிளக்ஸ் உரத்தால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது? இந்த 15:15:15 காம்பிளக்ஸ் உரத்திற்கு பதிலாக 17:17:17 காம்பிளக்ஸ் உரத்தை வாங்க விவசாயிகள் மிகவும் ஆர்வம் காட்டுவதால், அதனை வழங்குவதற்கு அரசு முயற்சிக் குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எவ்வளவு இழப்பு என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், 1974-75 ஆம் ஆண்டின் அரசு வாணிபத் திட்டத்தின் கீழ் 11,965 மெட்ரிக் டன் எடையுள்ள என். பி. கே. 15:15:15 காம்பிளக்ஸ் உரம் அரசின் கணக்கில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருப்பில் இருந்தது. அதைக் குறைப்பதற் காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அது குறைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கும் யோசனையை அரசு பரிசீலிக்கும்.

3. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) மதிப்பீட்டுக் குழு

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, சிறைத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் பதினான்காவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) இப் பேரவைக்கு அளிக்கிறேன்.